ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

ஊடக அறிவிப்பு இலக்கம்: HRC/P/i/T/14/05/25

## ஊடக அறிவிப்பு

கல்லூரி மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் மேற்கொண்ட புலனாய்வு கொட்டாஞ்சேனை மாடி வீடு கட்டிடமொன்றில் மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது சுயமான புலனாய்வினை ஆரம்பித்ததோடு> இது தொடர்பான புலனாய்வு ஆண்டு 2025 மாதம் 05 14ஆம் திகதி மு.ப. 10.30 மணியளவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்டது. இப்புலனாய்விற்கு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து வித்தியாலய அதிபர்> வலயக் கல்விப் பணிப்பாளர் சம்பவத்துடன் தொடர்பான ஆசிரியர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளான பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை மற்றும் தனிப்பிட்ட மேலதிக வகுப்பு இணைப்பாளர் ஆகியோர் இப்புலனாய்வு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

அதிபர் மற்றும் கணித ஆசிரியர் எதுவித நியாயமான காரணமும் தெரிவிக்காமல் குறித்த நேரத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு முன் விசாரணைக்காக ஆஜராகாமை சம்பந்தமாக அவர்களுக்கு எதிராக ஆணைக்குழு சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு அவர்களிடம் நியாயம் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மூலம் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஆணைக்குழு முன் கருத்து பரிமாரிக்கொள்ளப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் சார்பாக பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து தெரிவித்ததோடு இந்த அசம்பாவிதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி 7 தினங்களிற்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி பிரதி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்தோடு இந்த அசம்பாவிதம் பற்றி தற்போது வரை எடுத்துள்ள புலனாய்வு முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் படி பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட மேலதிக வகுப்பு இணைப்பாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமூகம் தந்ததோடு சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை வழங்கியதோடு பம்பலப்பிட்டி இராமநாதன் வித்தியாலய அதிபர் ஆண்டு

2025 மாதம் 05 15 ஆம் திகதி ஆணைக்குழு முன் ஆஜராகும் படி அறிவிப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பான புலனாய்வை நிறைவு செய்து தனது தீர்மானம் மற்றும் சிபார்சை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதொடு இந்த சம்பவம் தொடர்பாக தொடர்புடைய அரச நிறுவனங்கள் தத்தமது பொறுப்புக்கூறலை சரியாக செய்துள்ளார்களா? மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஒன்று நடந்தேரியுள்ளதா? அவ்வாறு நடந்தேரி இருந்தால் அதற்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை கண்டறிவது தொடர்பாகவும் ஆணைக்குழு தனது கவனத்தை செலுத்தியது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காமல் இருக்க கல்வி அமைச்சு மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அவதானத்தை செலுத்தியுள்ளது.

நிகால் சந்திரசிறி,
ஊடக பேச்சாளர் / பணிப்பாளர்
கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

14.05.2025

தொலைபேசி இலக்கம் : 011 2505595
மின்னஞ்சல் முகவரி : rm.director.hrcsl@gmail.com